# பரிபாடலில் திருமால் பெருமையும் வைணவத் தத்துவமும்

முனைவர்வி.கலாவதி
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறைத்தலைவர்,
இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்.
மின்னஞ்சல்-skalavathiv@gmail.com

44

**ஆய்வுச்சுருக்கம்**

பரிபாடல் திருமாலின் பெருமைகளை எடுத்துரைக்கும் ஒரு நூலாக சங்க காலத்தில் இருந்துள்ளது .வைணவ சமயத்தின் பெருமையை சங்க இலக்கியங்களில் பரிபாடல் மட்டும் தான் திருமால் பற்றிய கருத்துக்களை கூறும் நூலாக அமைந்துள்ளது. வைணவ சமயத்தினுடைய வளர்ச்சிக்கு உரிய ஆழ்வார்களால் பாடப்பட்ட நாலாயிர திவ்யப்பிரபந்தம் முன்பே பரிபாடல் இலக்கியம் முத்தாய்ப்பாக அமைந்திருந்தது. மேலும் ,திருமாலின் உருவ அமைப்பு மற்றும் நம்பிக்கை சார்ந்த இறைப்பற்று ஆகியவற்றை ஒருமித்ததாக சுட்டும் கருத்துக்கள் பரிபாடலில் இடம் பெற்றுள்ளன . கடவுள் பற்றிய கோட்பாடு தோன்றுவதற்கு முன்பே முன்பே பக்தி இலக்கியத்தினுடைய உச்ச தொடர்ச்சியாக இந்நூல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**“இறைக்கோட்பாடு** ”சமயத்தை வலியுறுத்துவதோடு மானுடத்தின் உயர்நிலை வாழ்வியலுக்காக உருவாக்கப்பட்ட ஒன்று. அத்தகைய “இறையியலில் வாழ்க்கையோடு ஒப்புமைப்படுத்திஆராயவேண்டியஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் நம்பிக்கைகோடு தொடர்புடைய ஆய்வுகள் இறைக்கோட்பாட்டின் மூலம் உளவியல் சார்ந்த வெற்றிகளைத் தருவதாக முடிவுகளைத் தருகின்றன. கடவுள், என்பதை உள்ளத்தைக் கடத்தல் என்றப்பொருளில் எளிமையாகக் கூறினாலும்,அதனைக்குறித்து ஆய்வுசெய்யும் போது உலகம் தழுவிய பொது சிந்தனைகளைக்குறித்து ஆராயவேண்டியத்தேவையும் இருக்கின்றது. “இறைவன்யார்?என்றவினாவிற்கு மன்னனை இறைவனாகக் காணும் போக்கு தமிழ்இலக்கியங்களில் காணமுடிகின்றது.வேதகால பெருந்தெய்வங்கான சிவன், திருமால், நான்முகன் போன்ற

கடவுளர்கள் பற்றிய கருத்துக்கள் மக்களின் மனதில் சென்றடையும் வண்ணம் புகுத்தப்பட்டதன் விளைவு இலக்கியங்களில் கடவுள் பற்றிய கருத்துகள் பெருமைகள் இடம்பெறத் தொடங்கிவிட்டன. அந்தவகையில் சங்கஇலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் இடம்பெற்றுள்ள திருமாலின் பெருமைகள் பற்றியும் வைணவத்தின் நீட்சியையும்அறியலாம்.

**வைணவம்- பரிபாடல்**

வைணவ சமயம் திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும்.உலகில் தீமைகள் ஓங்கும் போது திருமால் அவதாரம் எடுத்து உலகை அழிப்பார் என்பது வைணவர்களின் நம்பிக்கை.வைணவத்தின் கொள்கையாதெனில் மனிதவாழ்க்கையைச் செம்மைப்புடுத்துவதேயாகும்.வைணவத்தை வளர்த்த மத்துவர்,இராமானுஜர்,போன்றோர் காலத்திற்கு

முன்பே திருமால் வழிபாடு பற்றிய பாடல்கள் சங்கஇலக்கியங்களில் காணப்படுகின்றன.குறிப்பாக, பரிபாடலில் திருமால் பற்றி ஏழுபாடல்கள் மூலம்திருமால் பெருமைகள் வேததத்துவங்கள் பற்றிய கருத்துகள்இடம்மெற்றள்ளன. பரிபாடல் தமிழின் அரியக் கருத்துக்கள் உள்ள நூலாகச் சுட்டப்படுகின்றது.நாலாயிரதிவ்யப்பிரபந்தம் தோன்றுவதற்கு முன்பு தோன்றியவை சங்கஇலக்கியங்கள் இதனை அடியொற்றி பக்திப்பனுவல்களான திவ்யப்பிரபந்தங்களின் பாடல்கள்ஆழ்வார்களால் இயற்றப்பட்டுள்ளன.

**திருமால்பெருமைகள்**

ஏழு உலகங்களுக்கும் முதல்வன். ஆயிரம் தலைகளைக் கொண்ட ஆதிசேடன் என்ற பாம்பணையின் மீது திருப்பாற் கடலிலே பள்ளி கொண்டிருப்பவன்.தனது உந்திக்கமலத்திலிருந்து நான்முகனாகிய பிரம்மனைப் படைத்தவன்.திருமகள் உறையும்அகன்ற மார்பிமையுடையவன் என்றுசொல்லப்படுகின்ற கருத்துகள் யாவும் பரிபாடலில் இடம்பெற்றுள்ளன. திருமால் எடுத்த அவதாரங்களில் ஒன்றான கிருஷ்ணஅவதாரத்தில் (தமிழ்இலக்கியங்களில்கண்ணன் )என்றப்பெயரில் கூறப்படுகின்றது. பரிபாடலின் முதலாம்பாடலில் அருமறைப்பொருள், அமர்வென்றக்கணை, சொல்லுக்குள் அடங்காப்பெரும்புகழ், துதிமொழிகள் என்னும் நான்கு தலைப்புகளின் கீழ்திருமாலின் பெருமைகளையும் சிறப்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**அருமறைப்பொருள்கருத்தும்வைணவத்தத்துவமும்**

இறைவனாகிய திருமாலின் உருவ,அருவசிசிறப்புகளையும் எடுத்துக்கூறி,அதன்வழி உலகஉயிர்களைக்காக்கும் தன்மையை வைணவத்தின் கோட்பாடுகளில் பொதிந்து காணப்படுகின்றன என்பதை பரிபாடல் புலப்படுத்துகின்றது. திருமால் வழிபாடு என்பது தமிழகத்தில் இருந்துள்ளது என்பதை நிலம்சார்ந்தகருப்பொருட்களுள் ஒன்றான முல்லைநிலத்தின் தெய்வமான திருமால் பற்றிய கருத்து ஆரியர்களிடம் இருந்து தமிழகத்திற்கு வந்ததாகக் கூறும்ஆய்வுகள் ஏராளமாகத் தோன்றிவிட்டன.இந்தியப்பண்பாட்டோடு தொடர்புடைய கடவுளாக திருமால்வழிபாடு திகழ்வதால் தமிழக எல்லையை மட்டும் சுட்டி பேசுப்பொருளாகக் கொள்ளஇயலாது என்றாலும் பரிபாடலில் திருமாலின் பெருமைகளைக் கூற விழையும் பாடலில் கண்ணன்(அ)கிருஷ்ணவதாரத்தில் அவரின் சகோதரனான பலராமன்வடிவிலும் திருமாலே இருக்கின்றான் என்பதாகக் கூறப்படுகின்றது. என்பதன் மூலம் கடவுள்வழிபாட்டால் பண்பாட்டு ஒற்றுமைஇந்தியா முழுவதும் சிறப்பாக இருந்ததை அறியமுடிகின்றது.

"சேய்உயர் பணைமிசை எழில் வேழம் ஏந்திய
வாய்வாங்கும் வளை நாஞ்சில், ஒருகுழை ஒருவனை"[1]

(பரிபாடல்-1.வரிகள்-5,6)

என்ற வரிகளில் வளைந்த கலப்பைப்படையினைக் கொண்டவனும், ஒற்றைக்காதணி அணிந்தவனுமாகிய பலதேவனாகவும் திருமால் இருக்கின்றான் என்பதை பரிபாடல் சுட்டுவதன் மூலம் சங்கஇலக்கியக்காலத்தில் திருமால் பெரும்பான்மை மக்களால் வணங்கத்தக்க கடவுளாக இருந்ததன்

பின்னணியை உணரமுடிகின்றது. உழவை முன்னிருத்தி கடவுளர்கள் சமைக்கப்பட்டனர். என்ற கருத்தை மெய்ப்பிக்கும் தன்மையுடையனனவாகப் பரிபாடல் அமைந்துள்ளது. அதுபோல,இறைவனின் முழுமுதற்தோற்றம் பற்றிய பாடலில் கண்முன்னே நிற்கும் உருப்படிமமா காட்சியளிக்கும் தன்மையுடையதாகத் திருமாலின் தோற்றப்பொலிவு பாடப்பட்டுள்ளது. தாமரை மலரை வெல்லும் அழகுடைய கண்களை உடையவன் என்பதை "**எரிமலர்சிமைஇய கண்ணை"**என்ற தொடரில் அறியமுடிகிறது. திருப்பாவையில் ஆண்டாள் பங்கயக் கண்ணனைப் பாடேலோரெம்பாவாற்" என்றுபாடியுள்ளார். வைணவ சமயத்திற்கென்று தனிநூல்கள் எழுதப்படாத காலத்திற்கு முன்பே தனிப்பாடல்களாக இறைவனின் பெருமைகளைக் கூறிய நூலாகப் பரிபாடல் விளங்குகின்றது.மணிபிரவாளநடை கலக்காமல் தூயத்தமிழில் தெளிவாக திருமாலின் பாடல்களைக் கொண்ட நூலாகப் பரிபாடல் அமைந்துள்ளது.

"திருஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை ;மார்பில்
தெரிமணிபிறங்கும் பூணினை ;மால்வரை "[2]

(பரி-பா-1 வரிகள்-8-9)

என்ற வரிகளில் மார்பில் உனக்கே உரித்தான கவுத்துவமணி என்னும் அணியை அணிந்துள்ளவனே! என்றுபொருள் கொள்ள முடிகின்றது.

**நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில்,**

"மலைகளும், மாமணியும் ,மலர்மேல்மங்கையும் .சங்கும்தங்குகின்ற
அலைகடல் போன்று இவர்ஆர்கொல்?என்ன
அட்டப் புயகரத்தேன் என்றாரே"[3]

( பெரியத் திருமொழி-1122)

என்று பெரியத்திருமொழியில் மனிதர்களுக்கும் தன் தன்மையினாலே தந்துமலை போலும்தோள்களும்கௌத்துவமணியும் திருமகளும் பாஞ்சாசன்யமும் எப்போதும் நிலைபெற்று நிற்கும் கடல் போன்றவருமானஅட்டப் புயக்கரத்தோன் என்கின்றார். மேற்கண்ட பாடலில் இறைவன் அணிந்துள்ள கவுத்துவமணி பற்றிளகருத்து இடம்பெற்றுள்ளது.பக்திஇலக்கியகாலத்திற்கு முன்பே பரிபாடல் தோன்றிவிட்டது.இறைவனின் செயல்களும் பெருமைகளும் நாலாயிரம் பாடல் களில் பாடப்படுவதற்கு முன்பே வைணவத்தின் ஆழமான மறைப்பொருளை விளக்கும் கருத்துக்கள் எளிமையாக பரிபாடலில் காணமுடிகின்றது.

**"உடுவுறு தலைநிரை இதழ்அணிவயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்றுஇரைத்துஉரைஇயதானவர்
சிரம் உமிழ் புனல்பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம்தொடா அமர்வென்ற கணை"**[4]

(பரிபாடல் பா-1 வரிகள்23-28)

என்ற செய்யுளில் அமரர்களின்மீது கோபம் கொண்டு போருக்கெழுந்து அவர்களின் வயிறுகலங்கும்

படிவரிசையாக அடுக்கப்பட்டிருந்த அம்புகளை எடுத்து அரக்கர்கள் செலுத்த தொடங்கினர். அப்போது அவர்களின் தலையிலிருந்து குருதிவெள்ளமாக ஓடும்படியாகவும், வலிமை இழந்து மனம்சுழலும்படியாகவும் செய்துஅரக்கரைஅமரின்வென்றவன் திருமால்!என்று இறைவனின் சிறப்புகளைப் பற்றி பரிபாடல் குறிப்பிடுகின்றது.

**சொல்லுக்குள்அடங்காப்பெரும்புகழ்**

சங்க இலக்கியத்தில் தனித்தலைப்புகள் இட்டு இறைவனின் அரும்பெருஞ்சிறப்புகளைக் கூறியுள்ள இலக்கியமாக பரிபாடல் திகழ்கின்றது.பரிபாடலில்' சொல்லுக்குள் அடங்காப் பெரும்புகழ் பெற்றவனாக இறைவனாகியத் திருமால் திகழ்கின்றான். என்றுகூறும்வரிகளில்,

**' அறியாமையால் உன்னுடன் போர்புரிவோம்**' என்று துணிந்து எதிர்த்த அரக்கர்களின் வலிமை கெடும் படிவென்று போரில் மேன்மை அடைந்த குற்றமற்றஅண்ணலே ! என்று கூறுகின்றது.இறைவனுடைய அன்பு மிகப்பெரியது.அத்தகைய அன்பை வேண்டும் வேண்டுகோனை முன்னிருத்திப் பாடியுள்ள சொற்கள் இறைவனின் ஆற்றலை எடுத்துரைக்கக்கூடியனவாக அமைந்துள்ளன. இராமன், கண்ணன் முதலிய திருமால் அவதாரங்கள் தீயோரையும் தீமையையும் அழிக்கவல்லன. அதனால் அந்த இறைவனாகிய திருமாலின் அருட்செயல்கள் சொல்லுக்குள் அடங்காதவனாய் திகழ்கின்றன.

" அன்ன மரபின் அனையோய்! நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது?
அருமைநற்கு அறியினும் ஆர்வம் நின்வயின்
பெருமையின் வல்லாயாம் இவண் மொழிபவை"[5]
( பரிபாடல் பா-1 வரிகள்34-37)

திருமாலிடம் முறையிடுவதாக அமைந்துள்ளவரிகளில் அன்பும் ஆர்வமும் கலந்த சொற்களாக எடுத்தாளப்பட்டுள்ள பாங்கு சிறப்பிற்குரியது.இத்தகைய சிறப்புகளைக் கொண்டுள்ள திருமால் துதிமொழிகள் தோன்றுவதற்கு வழிகோலினவாக பரிபாடல்செய்யுட்கள் அமைந்துள்ளன.

**துதிமொழிகளில்திருமால்சிறப்பு**

திருமால் பற்றிய பல்வேறு அருங்குணங்கள் பொருந்திய போற்றுதலுக்குரிய கதைகளுக்கான துதிமொழிகள் பரிபாடலில் இடம்பெற்றுள்ளன.வைணவத்தத்துவம் என்பது தொடர்புடையதாகக் கூறப்பட்டாலும் தமிழில் வடமொழி கலப்பில்லாத தூயமொழியில் பாடப்பட்ட துதிமொழிகள் பரிபாடல் பகுதி பக்தி இலக்கியக்கதைகளின் முன்னோடி இலக்கியமாக விளங்குகின்றது.

"அறனும் ,ஆர்வலர்க்குஅருளும்நீ;
திறனும்இலோர்த்திருத்தியதீதுதீர்கொள்கை
மறனும் ,மாற்றலர்க்குஅணங்கும் ,நீ;
அம்கண்வானத்துஅணிநிலாத்திகழ்தரும்
திங்களும் ,தெறுகதிர்க்கனலியும் நீ;[6]
( பரிபாடல் பா-1 வரிகள்41-45)

என்று எத்தனையோ அருங்சிறப்பு பொருந்தியதன்மைகளுடன் திகழ்பவன் என்பதை அறமும் உன்பால் அன்புடையவர்களுக்கு நீ அருளிச்செய்யும் அருளுமாக நீயேஉள்ளாய்;நல்வழியில் செல்லும் திறனில்லாதவர்களை நல்வழியில் செல்லுமாறு திருத்திய குற்றமற்ற சிறப்பையுடைய மறமும் .திருந்தும் அந்நிலையில் உனக்கு பகைவராக மாறியவர்களை வருத்தும் துன்பமுமாக நீயேஉள்ளாய் என்று பாடப்பட்டுள்ளமை வழியாக இறைவனின் ஆற்றல் புலப்படுகின்றது.

**"இன்னோ ர்அனையை இனையயால்"** என்று கூறுவதன்மூலம்அவருக்குஒப்புமைகூறத்தக்கார்ஒருவருமிலர்என்பதைஅறியமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்களில் போற்றப்படக்கூடிய இலக்கியமாக பரிபாடல் விளங்குகின்றது.மேலும்,சங்கஇலக்கியங்களின் செழுமைக்கும்பெருமைக்கும் உரமாகும் வகையில் பரிபாடல் அமைந்துள்ளது.வைணவசமணத்தின் கூறுகளை எடுத்துரைக்கும்பழந்தமிழ் இலக்கியமாக இந்நூல்திகழ்கின்றது. திருமாலின் பெருமைகள் கூறும் இலக்கியமாகப் பரிபாடலைச் சுட்டலாம்.

**மேற்கோள்**

1. பரிபாடல்-1.வரிகள்-5,6
2. பரி-பா-1 வரிகள்-8-9)
3. பெரியத் திருமொழி-1122
4. பரிபாடல் பா-1 வரிகள்23-28
5. பரிபாடல் பா-1 வரிகள்34-37)
6. பரிபாடல் பா-1 வரிகள்41-45